63—

அகஸ்தீஸ்வரம் ஒன்றியம், அக்கரையில் கூட்டுறவு அங்காடி அமைத்தல்

***25224–டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :**

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் ஒன்றியம், அக்கரையில் தனியாக ஒரு கூட்டுறவு உணவு பங்கீட்டு அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் ஒன்றியம் அக்கரையில் தனியாக ஒரு கூட்டுறவு நியாயவிலைக்கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

69—

சால்துறையில் பாலம் கட்டுதல்

***22701–திரு. கே. தவசி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடமலைக்குண்டு-மயிலாடும்பாறை ஒன்றியத்தில், பொன்னம்படுகைக்கும் மயிலாடும்பாறைக்கும் இடையில் சால்துறை என்ற இடத்தில் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.